**C.C. 320 of 2013 Previous Date :**

**அரசு சாட்சி 2 சின்னான் (எ) குமரவேல் த/பெ.கருப்புச்சாமி . சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**05-01-2023**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்தில் இறந்து போன கணேசன் எனது மகன் என்றால் சரிதான். எனது மகனும், அ.சா.1 மகுடீஸ்வரனும் சென்ற வண்டியின் எண் எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகன எண் மற்றும் அதன் நிறம் எனக்கு தெரியாது. எனது மகனும் அ.சா.1ம் சென்ற வண்டியை எனது மகன் தான் ஓட்டி சென்றார். விபத்து நடந்த இடத்திற்கும் எனது ஊருக்கும் இடையே 6 கி.மீ தொலைவு இருக்கும். விபத்து நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் வீட்டில் தான் இருந்தேன் என்றும், கேள்விப்பட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். போலீசார் என்னை சம்பவயிடத்திலேயே வைத்து விசாரித்தார்கள். நான் சம்பவயிடத்திற்கு போன போது விபத்து ஏற்படுத்திய நபர் மற்றும் அவர் ஓட்டி வந்த வண்டி இருந்தது. வண்டியின் கலர் என்ன என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரித்த போது மகுடீஸ்வரன் தான் வண்டியை ஓட்டியதாக நான் சொன்னேன் என்றால் போலீசார் யார் வண்டியை ஓட்டினார்கள் என்று என்னிடம் கேட்கவில்லை. எனது மகன் கணேசனுக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை. நான் சொன்னது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் எனது மகன் கணேசனுக்கு ஓட்டுனர் உரிமம் இல்லாத நிலையில் அவர் தான் இருச்சக்கர வாகனத்தை ஓட்டி சென்று எதிரே வந்த வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2023.01.05 19:31:11 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**C.C. 320 of 2013** **Previous Date :**

**அரசு சாட்சி 4 வாசுகி க/பெ.மகுடீஸ்வரன் . சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**05-01-2023**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்தில் காயம்பட்ட மகுடீஸ்வரன் எனது கணவர் என்றால் சரிதான். எனது கணவர் மகுடீஸ்வரனும், இறந்து போன கணேசன் என்பவரும் சென்ற இருச்சக்கர வாகனத்தின் எண் தெரியுமா என்று கேட்டால் எனக்கு தெரியாது. வண்டியை கணேசன் தான் ஓட்டி சென்றார். கணேசனுக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. எனது கணவர் மீது மோதியதாக சொல்லப்படும் வண்டி எண் எனக்கு தெரியாது. விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2023.01.05 19:31:20 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**C.C. 320 of 2013** **Previous Date :**

**அரசு சாட்சி 5 ரம்யா க/பெ.கணேசன். சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**05-01-2023**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கில் இறந்து போன கணேசன் எனது கணவர். எனது கணவர் கணேசனும், மகுடீஸ்வரனும் சென்ற இருச்சக்கர வாகனத்தின் எண் தெரியுமா என்று கேட்டால் எனக்கு தெரியாது. இருச்சக்கர வாகனத்தை யார் ஓட்டிச்சென்றார்கள் என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. எனக்கு விபத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் கணேசனுக்கு ஓட்டுனர் உரிமம் இருந்ததா என்றால் இல்லை. விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2023.01.05 19:31:28 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**